# தமிழ் இலக்கியங்களில் சமூக அரசியல் பொருளாதார நிலை

பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்க மாநாடு

யாழ்ப்பாணம் - இலங்கை


பதிப்பாசிரியர்கள்

**முனைவர் சு. சதாசிவம்**

**முனைவர் சு. கௌசல்யா தேவி**

**எழுத்தாளர் ரஜிதா அரிச்சந்திரன்**

**அந்தமான் டி.என். கிருஷ்ணமூர்த்தி**

**அந்தமான் ஆர். கோபாலன்**

**யாழ்ப்பாணம் ச. பிரசன்னா**

**பாரீஸ் ஜெய. பாலகிருஷ்ணன்**



வெளியீடு

**முத்தமிழ்ச் சங்கம்**

110, புதிய செங்குந்தா வீதி

திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம், இலங்கை.

+94777925326

email : aricharajitha19@gmail.com

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ் இலக்கியங்களில் சமூக அரசியல் பொருளாதார நிலை |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் சு. சதாசிவம்<br>முனைவர் சு. கௌசல்யா தேவி<br>எழுத்தாளர் ரஜிதா அரிச்சந்திரன்<br>அந்தமான் டி.என். கிருஷ்ணமூர்த்தி<br>அந்தமான் ஆர். கோபாலன்<br>யாழ்ப்பாணம் ச. பிரசன்னா<br>பாரீஸ் ஜெய. பாலகிருஷ்ணன் |
| முதல் பதிப்பு | : | மே, 2024 |
| உரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| பக்கம் | : | 256 |
| கணினி அச்சு | : | கனிஷ் கிராபிக், மதுரை |
| அட்டை வடிவமைப்பு | : | ஆ.சு. கண்ணன், மதுரை<br>+91 9677937794 |
| அச்சாக்கம் | : | நொவினா ஆப்செட் பிரிண்டிங் & கோ<br>புதிய எண்.164, ப.எண்.144,<br>வி.ஆர். பிள்ளைத் தெரு, ஐஸ் ஹவுஸ்<br>சென்னை - 600 005. |
| வெளியீடு | : | முத்தமிழ்ச் சங்கம்<br>110, புதிய செங்குந்தா வீதி<br>திருநெல்வேலி கிழக்கு<br>யாழ்ப்பாணம், இலங்கை. |
| கைப்பேசி | : | +94777925326 |
| மின்னஞ்சல் | : | aricharajitha19@gmail.com |
| விலை | : | 300 |

**ISBN : 978-624-6564-00-1**

# 31. யாழ்ப்பாணம் இயலிசைவாரிதி ந.வீரமணிஐயரின் திருக்குறள் கீர்த்தனைகள் நூலிலுள்ள பாடல்கள் புலப்படுத்தும் திருவள்ளுவம்




**கிருபாசக்தி கருணா**

முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
0094 777286245
kirupasakthy@univ.jfn.ac.lk



**ஆய்வுச்சுருக்கம்**

தேவாரம் முதலான பக்தி இலக்கியங்களும் பிற்காலத்தில் எழுந்த கீர்த்தனை, பதம், தில்லானா போன்ற இசைவடிவங்களும் எல்லோராலும் பாடப்பட்டுவரும் முறையான இசையமைப்புக்கள் கொண்டவை. இவற்றிற்கெல்லாம் முன்னோடியாகத் திகழும் சங்கப்பாடல்கள், காப்பியப் பாடல்கள், பக்தி இலக்கியப்பாடல்கள் இசையுடன் பாடப்படுவது மிக அரிது. இந்த வகையில் திருவள்ளுவரின் திருக்குறள் பாடல்கள் ஒப்பற்ற நீதிப்பாடல்களாகத் திகழ்கின்றன. இன்றைய உலகில் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற இக்குறள் பாடல்களில் சில அதிகாரங்கள் இசைக்குறியீடுகளுடனும் வெளிவந்துள்ளன. ஆயினும், இரத்தினச் சுருக்கமாக இருக்கும் திருக்குறளின் பொருளைக் கருவாகக் கொண்டு பாமரரும்

விளங்கக்கூடிய பாடல்களை இயற்றமுடியும், இவற்றைக் கொண்டு இசை நிகழ்ச்சிகளை ஆற்றுகை செய்யமுடியும் என்ற கருதுகோளின் அடிப்படையில் இந்த ஆய்வு நகர்த்தப்படுகின்றது. யாழ்ப்பாணம் தந்த மிகப் பெரிய தமிழ் வாக்கியக்காரரான பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரின் திருக்குறள் கீர்த்தனைகள் ஆய்வுக்கான மூல நூலாக எடுக்கப்படுகின்றது. வீரமணி ஐயாவின் திருக்குறள் கீர்த்தனைகள் சாதாரண மக்களும் திருக்குறளைப் புரிந்து கொள்ளும் வகையில் தனித்தமிழ் பாடல்களாகவும் இசைக்கக் கூடிய பாடல்களாவும் உள்ளமையை வெளிக்கொணர்வது இவ்ஆய்வின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள் - திருக்குறள், கீர்த்தனை, பாடல், இசை, வாக்கேயகாரரர்

**வீரமணிஐயர்**

இலங்கையிலே யாழ்ப்பாணத்திலுள்ள இணுவில் எனும் ஊரில் 1931 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆறாம் தேதி பிரம்மஸ்ரீ நடராஜர் ஐயர் சுந்தராம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் வீரமணி ஐயர். இவர் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் சிறந்த தேர்ச்சியுள்ள ஒரு முத்தமிழ் வித்தகர், கவிஞர், வாக்கேயகாரரர், இசைக் கலைஞர்,

பரத நாட்டியக் கலைஞர். ஈழத்திலே தன் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு மேற்படிப்பிற்காக இந்தியா சென்று, சென்னை கலாசேத்திரத்தில் நடனம் பயிலுவதற்கான மாணவனாகச் சேர்ந்தார். அங்கு ஸ்ரீமதி ருக்மிணி தேவி அருண்டேல், சாரதா அவர்களிடம் நடனத்தையும் ஸ்ரீபாபநாசம்சிவன், எம்டி.இராமநாதன் ஆகியோரிடம் இசையையும் கற்றார். அங்கு கல்வி கற்கும் காலத்தில் மயிலாப்பூரில்

கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கற்பகாம்பிகா சமேத கபாலீஸ்வரரிலே மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். அவ் ஆலய இறைவி கற்பகாம்பிகையிடத்து மிகுந்த பற்றுள்ளவராகித் "திருமயிலை கீர்த்தனைகள்" என்ற தலைப்பிலே பல சிறந்த பாடல்களையும் "திரு மயிலைக் குறவஞ்சி" எனும் நடன நாடகத்தையும் இயற்றினார். இவருடைய கீர்த்தனைகளிலே "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாய் அம்மா" எனத் தொடங்கும் ஆனந்தபைரவி ராக ஆதி கால

கீர்த்தனை மிகப் பிரபல்யமானது. இப்பாடல் இவ்வாலயக் கருங்கல்லில் பொறிக்கப்பட்டு அதன் கீழ் இதன் ஆசிரியர் யாழ்ப்பாணம் ந. வீரமணி ஐயர் என எழுதப்பட்டுள்ளது. இவற்றைத் தொடர்ந்து அவர் பல நூல்களை இயற்றியுள்ளார். இவற்றிலே திருக்குறள் கீர்த்தனை என்ற நூல் மிக முக்கியமானது. திருவள்ளுவரின் திருக்குறள்களில் எண்பது குறள்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பொருளை அடிப்படையாகக் கொண்டு கீர்த்தனைகள் இயற்றப்பட்டுள்ளது. இவற்றுடன் வேறு பல இசையமைப்புக்களுடன் சேர்த்து இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

### கீர்த்தனைகள்

திருக்குறள் பாக்களைக் குறள் யாப்பில் அமைந்தவாறு கீர்த்தனையாகப் பாடுவதைக் காட்டிலும், அக்குறள் சுட்டும் கருத்தைக் கீர்த்தனையாகப் பாடுவது சிறந்தது. ஈரடிக்குறள் சுட்டும் கருத்துக்கள் இலகுவாக பாமரமக்கள் உட்பட மக்கள் அனைவரையும் சென்றடைவதற்கு இக்கீர்த்தனைகள் பெரிதும் உதவுகின்றன. அந்தவகையில் இந்நூலிலுள்ள கீர்த்தனைகள் சிறப்புப் பெறுகின்றன.

### எடுத்துக்காட்டு-01

“பெற்றான் பெறின்....” என்ற குறளின் கருத்தான சிறந்த ஒழுக்கமுடைய மனையாளின் சிறப்பைக் கூறவந்த வீரமணி அவர்கள், இதற்குரிய கீர்த்தனையின் சரணத்தைப் பின்வருமாறு அமைத்துள்ளார்.

“கொண்டிடும் கணவனைத் தன் தெய்வமெனக் கொண்டு
கண்டிடுமின்பமெல்லாம் களித்தவனோடு கண்டு
எண்ணரும் புகழ் மணக்க எழிலாய் அறங்கள் செய்து
மண்ணுலகில் இல்வாழ்வு மாண்தரும் மனைவியை”

இவ்வாறான சிறந்த மனைவியைத் தேவஉலகில் வாழும் தேவர்களும் போற்றுவர் எனப் பல்லவியில் கூறி அழகான கவித்துவத்துடன் நிறைவு செய்கின்றார். இக்கீர்த்தனை சகானா இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

### எடுத்துக்காட்டு-02

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்...." என்ற குறளின் கருத்தைப் பின்வருமாறு பல்லவியில் அமைத்துள்ளார்.

"பேரின்பம் எய்திடுவாள்-பெற்றதாய்

பெற்ற போதிலும் மகன் மிக்கவன் எனக் கேட்க"

இக்கீர்த்தனை சுபபந்துவராளி இராகம், ஆதி இராகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

### முடிவுரை

வீரமணிஐயாவின் இந்நூலில் எட்டு அதிகாரத் தலைப்புகளில் எண்பது குறள்களுக்குக் குறளின் கருத்துக்கள் மாறாமல் கீர்த்தனைகள் அமைக்கப்பட்டுள்ளன. பல தமிழ் அறிஞர்கள் திருக்குறளுக்குப் பல உரைகள் எழுதியிருந்தாலும் மிக இலகுவான முறையில் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் இப்பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பானது.

இப்பாடல்கள் இசையரங்குகளில் பாடுவதற்கு ஏற்றவையாகப் பொருத்தமான இராக தாளக் குறிப்புக்களுடன் அமைக்கப் பட்டிருப்பதால் இசைக்கலைஞர்கள் இவற்றைப் பாடி திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்யவேண்டும்.

### துணைநூல்

வீரமணிஐயர், மா, த, ந., (2006) திருக்குறள் கீர்த்தனைகள், வீரகிருஷ்ணா வெளியீட்டகம், இணுவில்.